29.04.2025 CC 278/2019 PW1. செல்வ ஜெயந்தி

கடந்த 09.12.2021ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P.711/2022 dated 16.08.2022ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. குற்றம் சுமத்தப்பட்ட நபர் JR டியூசன் சென்டர், மாடத்தட்டுவிளை மீன்கடை அருகே நடத்தி வந்தார் என்றால், சரிதான். அந்த சென்டரில் Spoken English மற்றும் டியூசன் நடத்தி வந்தார் என்றால், சரிதான். திருமணத்திற்கு பிறகு குற்றம் சுமத்தப்பட்ட நபர் டியூசன் சென்டர் வைத்து Spoken English நடத்தி வந்தார் என்றால், சரிதான்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபரும் எனது அண்ணனும் ITI படிக்கும் போது நண்பர்கள் என்பதால் அதன் அடிப்படையில் அறிமுகமாகி திருமணம் நடந்தது என்றால், சரியல்ல. எனது குடும்பம் வறுமையான குடும்பம் என்றாலும் எனது அண்ணன் வெளிநாட்டிற்கு சென்ற சமயத்தில் அங்கிருந்து குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் பேசி என்னை திருமணம் செய்துக் கொள்ளுமாறு கேட்டதாகவும் அதனடிப்படையில் இந்த திருமணம் நடைபெற்றது என்றாலும், சரியல்ல.

3. குற்றம் சுமத்தப்பட்ட நபரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் என்னிடம் வரதட்சணை எதுவும் கேட்கவில்லை என்றால், சரியல்ல கேட்டார்கள். மேற்படி சங்கதியை நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது திருமணத்தின் போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஐந்தரை பவுன் தங்கத் தாலி மற்றும் தாலிச்சரடு அணிவித்தார் என்றால், சரிதான்.

4. எங்கள் திருமணம் முடிந்து நான் மாமியார் வீடு செல்லும் போது எனது மாமியார் அரை பவுண் தங்க காப்பு அணிவித்தார் என்றால், இல்லை. மேற்படி சங்கதியை நான் பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. எனது கணவருக்கு எத்தனை உடன் பிறந்த சகோதர சகோதரரிகள் என்றால், 1 அக்கா மற்றும் 1 தம்பி உள்ளார்கள். நான் எனது முதல் விசாரணையில் எனது கணவரின் அக்காவிற்கு அரை பவுண் மோதிரம் கொடுத்ததாக சொல்லப்படுவது பொய்யாகும் என்றால், சரியல்ல.

5. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் அக்கா துறவறம் பூண்டதால் அவர் நகை எதுவும் அணிவிக்க மாட்டார் எனவே அவர் வாங்கவில்லை என்றால், சரியல்ல, அவர் வாங்கி அதனை அவர் அம்மாவிடம் கொடுத்துவிட்டார். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தம்பிக்கு அரை பவுண் மோதிரம் கொடுத்ததாக சொல்லப்படுவது பொய் என்றால், சரியல்ல.

6. எனது கணவர் BA., English பட்டதாரி என்பதால் அதன் அடிப்படையில் திருமணம் நடைபெற்றது என்றால், இல்லை. அவர் 12ம் வகுப்பு தான் படித்துள்ளார். ஆனால் MA., English என்று எங்கள் திருமண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக கூறப்பட்டவை என்றால், சரியல்ல.

7. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள உன் பல் சரியில்லை, கட்டையாக இருக்கிறாய், நான் காதலித்த பெண் போல் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர் வேறு பெண்ணை காதலிக்கவில்லை என்றாலும் என்னை மட்டும் தான் காதலித்தார் என்றாலும் அதனால் தான் மறுமணம் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. அவர் வேறு ஒரு பெண்ணை காதலித்திருந்தார். அவர் அவ்வபோது அந்தப் பெண்ணை என்னுடன் ஒப்பிட்டுப் பேசுவார்.

8. குற்றம் சுமத்தப்பட்ட நபர் மற்றும் அவரது குடும்பத்தினரும் வரதட்சணை கேட்கவில்லை என்றாலும், வரதட்சணை கேட்பதற்கு அவசியம் இல்லை என்றாலும் திருமணத்திற்கு முன்பே வீடு கட்டி உள்ளார் என்பதாலும் நான் வரதட்சணை கேட்டார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர் வாஸ்து படி வீடு கட்ட வேண்டும் என கூறி என்னை துன்புறுத்தி வரதட்சணை கேட்கவில்லை என்றாலும் அவர் குளியல் அறை தண்ணீர் சம்மந்தமாக பிரச்சனை வந்ததால் தான் அதனை சரிசெய்தார் என்றாலும், சரியல்ல.

9. குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவரது வங்கிக் கணக்கிலிருந்து 50ஆயிரம் ரூபாய் எடுத்து தான் மேற்படி வீட்டின் குளியலறையை சரிசெய்தார் என்றாலும், சரியல்ல. என்னிடம் இருந்து தான் வாங்கினார். என் பெண் குழந்தைக்கு எனது கணவர் வீட்டில் இருந்து 1 பவுனும் எனது வீட்டில் இருந்து 1 பவுனும் நகை செய்தார்கள் என்றால், சரியல்ல. எனது வீட்டில் இருந்து மட்டும் தான் 5 பவுண் நகை செய்தார்கள்.

10. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னை பராமரிக்கவில்லை என்பது பொய்யாகும் என்றால், சரியல்ல. குற்றம்

சுமத்தப்பட்ட நபர் என்னையும் என் குழந்தையும் முறையாக பராமரித்து வந்தார் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எங்கு வீடு வைத்துள்ளார் என்றால், வில்லுக்குறி, ஆற்றுபுறம்போக்கு இடத்தில் வீடு வைத்துள்ளார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் அந்த இடத்தில் வீடு வைக்கவில்லை என்றாலும், ஒரு குடிசை போட்டு வாழ்ந்து வந்தார் என்றால், சரியல்ல.

11. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது பெயரிலும் அவரது பெயரிலும் சேர்த்து சொத்து வாங்கியுள்ளார் என்றால், சரிதான். அது திருநெல்வேலி மாவட்டம் அச்சம்பாடு என்ற இடத்தில் உள்ளது என்றால், சரிதான். அது 4 அயிட்டங்களாக 16 சென்ட் இடம் ஆகும் என்றால், சரியல்ல. அது 12 சென்ட் ஆகும். போலிசார் விசாரணையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் பலமுறை நகைகள் வாங்கி அடகு வைத்ததாக கூறியுள்ளதற்கு அடகு வைத்த இரசீதுகளை போலிசார் விசாரணையின் போது கொடுத்தேனா என்றால், போலிசார் என்னிடம் கேட்டார்கள். ஆனால் எனக்கு கொடுத்தது போல் ஞாபகம் இல்லை.

12. நகைகளை அடகு வைக்காததால் தான் அடகு இரசீதுகளை நான் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. தற்சமயமும் அது அடகில் தான் உள்ளது. நான் எனது பெயரில் நகைகளை அடகு வைத்தது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுப்பதற்கு அல்ல என்றால், இல்லை. நான் தான் அடகு வைத்தேன். மேலும் அந்த பணத்தை குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் தான் கொடுத்தேன்.

13. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது பெயரில் 5 சென்ட் நிலம் வாங்குவதாக கூறினார் என்றால், சரிதான். ஆனால் அவர் எனது பெயரில் 5 சென்ட் நிலத்தை பதிவு செய்யவில்லை. டியூசன் சென்டரில் பயிலும் மாணவிகளை வைத்து சந்தேகப்பட்டதால் தான் 12.01.2012 அன்று குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனக்கு வழக்கறிவிப்பு அனுப்பியதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

14. அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் என்னையும் குற்றம் சுமத்தப்பட்ட நபரையும் விசாரணை செய்தார்கள் என்றால், சரிதான். எந்த தினம் நான் புகார் கொடுத்தேன் என்றால், அது சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் வழக்கறிவிப்பு வந்தவுடம் புகார் கொடுத்தேன். மேற்படி புகாரின் போலிசார் விசாரணை முடிந்து போலிசார் எங்களை சேர்ந்து வாழ சொன்னார்களா என்றால், சரிதான்.

15. நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள குற்றம் சுமத்தப்பட்ட நபர் கேட்டின் சாவிக் கொடுக்க மாட்டார் என்றும் பியூஸ் புடிங்கிவிடுவார்கள் என்றும் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது புகார் கொடுப்பேன் என்று மிரட்டினேன் என்றால், சரியல்ல. நான் இரண்டாவதாக காவல்நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் விசாரணை செய்யப்பட்டு அது உண்மையல்ல என தெரிந்து போலிசார் அறிவுரை கூறி சேர்ந்து வாழ சொன்னார்களா என்றால், சரியல்ல.

16. இரண்டாவதாக கொடுத்த புகாரில் காவல்நிலையத்தில் எங்களை சேர்ந்து வாழச் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளாமல் என் பிள்ளையை எடுத்துக் கொண்டு எனது அண்ணன் வீட்டுக்கு சென்று விட்டேன் என்றால், சரிதான். அதன்பிறகு நீதிமன்றத்தில் Direction மனு தாக்கல் செய்து வழக்கு பதிவு செய்தேன் என்றால், சரிதான்.

17. இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் அம்மா மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தம்பி ஜான்சன் ஆகியோர்களின் பெயர்கள் நீக்கப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். குற்றஅறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் அம்மா மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தம்பி ஜான்சன் ஆகியோர்களின் பெயர்கள் நீக்கப்பட்டதற்கு எதிராக சட்டநடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால், இல்லை. எனக்கு வழக்கறிஞர் இல்லாததால் சட்டநடவடிக்கை எடுக்கவில்லை. நான் வழக்கறிஞர் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

18. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் அம்மா மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தம்பி ஜான்சன் ஆகியோர்கள் எனக்கு வரதட்சணை கேட்டு கொடுமை செய்யவில்லை என்பதால் தான் அவர்களின் பெயர்கள் குற்றஇறுதி அறிக்கையில் இருந்து நீக்கம் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த பிறகு எங்களுக்குள் சமாதானம் செய்யப்பட்டு நாங்கள் இருவரும் சேர்ந்து எங்களது மகளின் பெயரில் திருநெல்வேலி மாவட்டம் அச்சம்பாடில் உள்ள நிலத்தை எழுதினோம் என்றால், சரிதான்.

19. அதன் பிறகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகர்கோவிலில் சமரச விவாகரத்து IDOP No.407/2014 என்ற வழக்கு தாக்கல் செய்து விவாகரத்து பெறப்பட்டது என்றால், சரிதான். நான் மேற்படி வழக்கில் எனக்கு 2ம் மனுதாரர் தர வேண்டிய

சீதனப்பொருட்கள் அனைத்தையும் நான் பெற்றுக் கொண்டு வேறு எந்த தருணத்திலும் நீதிமன்றத்தை நாடி வாழ்க்கை பொருள் உதவி கோர மாட்டேன் என்றும் வேறு எந்தவிதமான இடங்சல்களும் 2ம் மனுதாரருக்கு செய்யமாட்டேன் என்றும் இனி வருங்காலத்தில் 1ம் மனுதாரரும், 2ம் மனுதாரரும் பிரிந்து அவரவர் விருப்பம் போல் வாழலாம் என்றும் முடிவு செய்துள்ளேன் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். ஆனால் நான் அப்பொழுது நகையைப் பற்றி எதுவும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால், சரிதான். மேற்படி **IDOP No.407/2014 என்ற வழக்கின் அ.சா.1–ன் சத்தியபிரமாண வாக்குமூலம் நீதிமன்ற சான்றிட்ட நகல் Ex.D1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

20. நான் விவாகரத்து பெற்ற பின்பு வேறு திருமணம் செய்துக் கொண்டேன் என்றால், சரிதான். தற்சமயம் அவருடன் தான் வாழ்ந்து வருகிறேன் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பணம் பெறும் எண்ணத்தோடு சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கிலுள்ள மற்ற சாட்சிகள் அனைவரும் எனது தெரிந்த நபர்கள் மற்றும் நண்பர்கள் என்றால், சரிதான்.

21. குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எனது நகைகள் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் இல்லை என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.